# 12

### சபை:

# இதன் நிறுவன அமைப்பு

## இதன் நிறுவன அமைப்பில் உள்ள காரணிகள்

**1. சபை என்றால் என்ன (கொலோ. 1:18)?**

*அ. "தலை" மற்றும் "உடல்" என்பவை நிறுவன அமைப்புக்கு எவ்வித கருத்துக்களை அளிக்கின்றன? தலையின் அதிகாரம் என்ன (மத். 28:18)?*

*ஆ. ரோமர் 12:4, 5 வசனப் பகுதி நிறுவன அமைப்பிற்குத் தரும் ஆலோசனை என்ன?*

*இ. சபையிலும் சபையின் மேலும் மிக உயர்ந்த அதிகாரம் கொண்டவர் யார் (எபே. 1:22, 23)?*

**2. இதன் கண்காணிகள்:**

*அ. தீத்து கிரேத்தா தீவில் விட்டு வைக்கப்பட்டது ஏன் (தீத்து 1:5)?*

*ஆ. ஒவ்வொரு சபையிலும் பவுல் யாரை நியமித்தார் (அப். 14:23)?*

*இ. அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது யார் (அப். 15:6, 22, 23)?*

**3. இதன் ஊழியக்காரர்கள்:**

*அ. அப்போஸ்தலர்கள் எதற்காக ஏழு பேரை நியமித்தார்கள் (அப். 6:1-6)? இப்படிப்பட்டவர்கள் பிற்பாடு என்னவென்று அழைக்கப்பட்டனர் (1 தீமோ. 3:8, 13)?*

*ஆ. பிலிப்பியில் இருந்த சபையைப் பவுல் எவ்விதம் விளித்தார் (பிலி. 1:1)?*

**4. இதன் உறுப்பினர்கள் - பொதுவான பணித் திறனில் செயல்படாதவர்கள்:**

*அ. அப்போஸ்தலர்கள் சபைக்குழுமம் முழுவதையும் பற்றி உரைத்தது எவ்வாறு (அப். 6:2)?*

*ஆ. சபை என்ற இந்த சரீரம் எவர்களைக் கொண்டுள்ளது (1 கொரி. 12:14, 27)?*

*இ. சபை என்னவென்றும் அழைக்கப்படுகின்றது (அப். 20:28)?*

**5. இதன் முழுத்தலைமைத்துவம் - ஐந்து மடங்கு வரம் என்ன (எபே. 4:8-11)?**

*அ. அப்போஸ்தலர்கள் - கிறிஸ்துவுக்கு கண்கண்ட சாட்சிகளாக சாட்சியளிக்க மற்றும் வெளிப்படுத்த. சபை எக்கருத்தில் அப்போஸ்தலர்களைக் கொண்டுள்ளது? நியாயாதிபதிகள் என்ற வகையில், அவர்களின் சாட்சியமானது புதிய*

*ஏற்பாட்டை மட்டும் ஒரே வழி காட்டியாக வெளிப்படுத்திற்று.*

ஆ. *தீர்க்கதரிசிகள் - வெளிப்படுத்த மற்றும் போதிக்க; இப்பொழுது, போதிக்க.*

இ. *சுவிசேஷ ஊழியர்கள் - சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க.*

ஈ. *மேய்ப்பர்கள் - மந்தையைக் கவனிக்க, போஷிக்க மற்றும் பாதுகாக்க.*

உ. *போதகர்கள் - எல்லாக் காலங்களிலும் அறிவுறுத்த.*

## ஆழ்ந்து சிந்திக்கச் சில விஷயங்கள்

1. ***முன் கூறப்பட்டவற்றிலிருந்து சபை நிறுவன அமைப்பின் கூறுகள் யாவற்றையும் குறிப்பிடவும்.***
2. ***இந்தக் காரணிகள் யாவையும் இல்லாமல் சபையானது முழுமையான நிறுவன அமைப்பாக்கப்பட முடியுமா?***
3. ***மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இல்லாமல் சபையானது எவ்வளவு காலம் செயல்பட வேண்டும்?***
4. ***மேல் உள்ள 5ம் கருத்தில் உள்ள தலைவர்கள் முதலாவது எதற்காக ஏவுதல் பெற்றார்கள் (எபே. 4:12)?***

   அ. *அப்படிப்பட்ட ஏவுதலானது எவ்வளவு காலம் தொடர வேண்டியிருந்தது (எபே. 4:13)?*

   ஆ. *இந்த ஏவுதலின் அவசியம் என்ன (எபே. 4:14, 15)?*

## மூப்பர்கள் என்பதற்கான வார்த்தைகள் - படிக்கத் தரப்படுகின்றது

| கிரேக்கம்: | மொழிபெயர்ப்பு: | குறிப்பு வசனங்கள் |
|---|---|---|
| *Episkopos* | *கண்காணி* | *அப். 20:28; பிலி. 1:1; 1 தீமோ. 3:1; தீத்து 1:7.* |
| *Presbuteros* | *பிரிஸ்பிட்டர் - மூப்பர்* | *அப். 14:23; 1 தீமோ. 5:1, 17; தீத்து 1:5; 1 பேது. 5:1.* |
| *Poimen* | *மேய்ப்பர் - போதகர்* | *எபே. 4:11; 1 பேது. 2:25; 5:1, 2.* |
| *Proistemi* | *உங்கள்மேல் ஆளுகை செய்பவர்* | *ரோமர் 12:8; 1 தெச. 5:12; 1 தீமோ. 5:17.* |
| *Hegeomai* | *வழிநடத்த, ஆட்சி செய்ய* | *எபி. 13:7, 17, 24.* |

1. ***“கண்காணி” என்பதன் அர்த்தம் என்ன?***

   *ஒரு தலையின்/தலைவரின் கீழ் காவல் செய்கிறவர், கவனிக்கின்ற ஒருவர், மேற்பார்வையிடுகிறவர்.*

2 ***“பிரிஸ்பிட்டர்” மற்றும் “மூப்பர்” என்பவற்றின் அர்த்தத்தைக் கொடுக்கவும்.***

   *அனுபவத்தில் மேலோங்கியவர், ஒரு முதியவர், ஒரு மூப்பர்; சபைகளில் முன்னிற்பவர்.*

3. ***“மேய்ப்பர்” மற்றும் “போதகர்” என்பவற்றை விளக்கப்படுத்தவும்.***

*இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து நோக்குகையில், பாதுகாப்பு, முன்மாதிரிகள் மற்றும் வழிநடத்துதல் ஆகியவற்றிற்கு மற்றவர்கள் தங்களை ஒப்புவிக்கும் நபர்(கள்).*

4. ***“அதிகாரம் செய்ய” என்பதினால் அர்த்தப்படுத்தப் படுகின்ற கருத்து என்ன?***
   *முன்னோடியாய் இருத்தல் (முன்னின்று வழி நடத்துதல்), கட்டளையிடுதல், மற்றும் மேலானவராயிருத்தல்.*
5. ***“நடத்துகின்ற” என்பதினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன?***
   *இயக்க, மேற்பார்வையிட.*
6. ***“கண்காணி,” “மேய்ப்பர்,” “போதகர்” மற்றும் “அதிகாரி” ஆகியவை ஒரே பணி நிலையைக் குறிக்கின்றன என்பதை நீங்கள் எவ்விதம் அறிகின்றீர்கள்?***
   *கடமைகள் ஒன்று போலவே உள்ளன. ஆகவே ஊழியத்தின் முழுமை இதில் உள்ளது.*
7. ***“மேய்ப்பர்கள்” (எபே. 4:13) என்ற வார்த்தை எப்பொழுதாவது நவீனக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதா?***
   *இல்லை. ‘‘சபையின் பாஸ்ட்டர்’’ என்பது வேதரீதியான போதனையில் குறைபாடுள்ளதாக இருக்கின்றது.*